FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | அரசியல் விஞ்ஞானம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 11) 4 | 21) 3 | 31) 5 | 41) 4 |
| 2) 3 | 12) 3 | 22) 2 | 32) 4 | 42) 2 |
| 3) 4 | 13) 2 | 23) 4 | 33) 1 | 43) 5 |
| 4) 4 | 14) 1 | 24) 1 | 34) 2 | 44) 3 |
| 5) 2 | 15) 5 | 25) 3 | 35) 3 | 45) 1 |
| 6) 1 | 16) 4 | 26) 4 | 36) 4 | 46) 4 |
| 7) 3 | 17) 1 | 27) 5 | 37) 5 | 47) 1 |
| 8) 5 | 18) 5 | 28) 2 | 38) 3 | 48) 2 |
| 9) 3 | 19) 4 | 29) 1 | 39) 1 | 49) 1 |
| 10) 5 | 20) 2 | 30) 3 | 40) 4 | 50) 3 |

### பகுதி A

agaram.lk

01. i) கார்னர்
ii) லஸ்கி / கில்கினரஸ்ட்

02. i) கி.மு 3ஆம் நூற்றாண்டு
ii) அரிஸ்ரோட்டில்

03. 1) அரசின் ஆள்புலப்பரப்பு சிறியது.
2) பிரசைகளுக்கு மட்டும் அரசியலதிகாரம் காணப்பட்டமை.

04. i) சமூகவியல் அணுகுமுறை
ii) நடத்தைவாத அணுகுமுறை

05. i) தாராளவாத சிந்தனாவாத குழுவினர்
ii) பாசிசவாத குழுவினர்

06. ஜோன் லொக்
பிளேட்டோ

07. ஜனாதிபதி அரசாங்கமுறை
பாராளுமன்ற அரசாங்கமுறை

08. சட்டம்
ஒழுக்கம் / நல்லொழுக்கம்

09. அடிப்படைச்சட்டம்
மீயுயர் சட்டம்

10. ஜீன்போடின்
சாள்ஸ்மொன்ரஸ்கியூ

11. சுதந்திர ஊதியச் சந்தைதோற்றம்
சாதிமுறை பலவீனம் அடைந்தமை.
முதலாளித்துவ சமூகமாக மாறுவதற்கு அடித்தளமிடப்பட்டமை.

12. 1833 – கோல்புரூக் யோசனை
1931 – டொனமூர் யாப்பு சீர்திருத்தம்

13. அரசுக்கழகம்
50 பேர்

14. 1) இலங்கை அமைச்சர்கள் - 07 பேர்
2) அரச காரியதரிசின் - 03 பேர்

15. மகாதேசாதிபதி
பிரதமர்

16. 1) 29 (2) சரத்து
2) பிரதிநிதிகள் சபைக்கான 6 நியமன உறுப்பினர்கள்
3) செனட்சபை
4) பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிமுறை
5) பொதுச்சேவை ஆணைக்குழு
6) நீதிச்சேவை ஆணைக்குழு

17. இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு
ஜனாதிபதி

18. ஆளுநர்
13 ஆவது யாப்புத்திருத்தம்

19. 5 வருடங்கள்
35 வயது

20. தேர்தல் மூலம் தெரிவு – 196
தேசியப்பட்டியல் மூலம் நியமனம் - 29

agaram.lk

## பகுதி B

01\. அரசியல் என்பது மனிதர்கள், அரசு, அரசாங்கம் மற்றும் அரசியல் அதிகாரம் ஆகிய மாறிகளுக்கிடையில் இடம்பெறும் அந்நியோன்னிய செயற்பாட்டை இனங்காணுதல். இதனை பிரயோக அரசியல், கோட்பாட்டு அரசியல் என்று இரு பகுதிகளாக இனங்காணலாம்.

பிரயோக அரசியல் என்பது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் சகல மனிதர்களும் பங்கேற்கும் ஒரு விளையாட்டாகும். பிரயோக அரசியலின் கற்கைப் பகுதியே கோட்பாட்டு அரசியலாகும். கோட்பாட்டு அரசியலின் பிரதான நோக்கம் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் வாழும் மனிதர்களின் பொது நன்மையினை சிறந்த முறையில் அரசியலின் மூலம் எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதனைக் கண்டறிவதாகும்.

பிரயோக அரசியலின் இயல்பு, கோட்பாட்டு அரசியலின் இயல்புகள் என்பவற்றை எழுதி விளக்கியிருக்க வேண்டும். அறிமுகம் 3 புள்ளிகள், பிரயோக அரசியல் 7 புள்ளிகள், கோட்பாட்டு அரசியல் 7 புள்ளிகள், முடிவுரை – 3 புள்ளிகள்.

02\. i) சட்டத்துறைபற்றிய விளக்கம் - புள்ளி – 1
வகிபாகத்திற்கு – 8 புள்ளிகள், முடிவுரை – 1
சட்டவாக்கம் செய்தல், நிறைவேற்றுத்துறையினை கட்டுப்படுத்தல், நிறைவேற்றுத்துறைக்குத் தேவையான பெரும்பான்மை ஆதரவினை வழங்குதல், நாட்டின் நிதியை கட்டுப்படுத்தல், நீதித்துறைசார்ந்த பணிகள், தெரிவு செய்து நியமிக்கும் குழுவாகச் செயற்படுதல், அரசியல் யாப்பினைத் திருத்துதல். எதிர்கால அரசியல் தலைவர்களைப் பயிற்றுவித்தல், மக்களின் மனக்குறைகளை முன்வைத்தல், பரிசோதனை மற்றும் விசாரணைப் பணிகள் தொடர்பாக விளக்கியிருக்க வேண்டும்.

ii) அறிமுகம் - 1 விடயங்கள் - 8 முடிவுரை - 1
அரசாங்க சேவைக் கட்டுப்படுத்தல், சட்டத்துறைசார்ந்த வகிபாகம், நீதித்துறை சார்ந்த வகிபாகம், அரச பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், அரச நிதியினைக்கட்டுப்படுத்தல், வெளிநாட்டு விவகாரங்களைக் கட்டுப்படுத்தல், சடங்கு முறையான வகிபாகம், கட்டளைகளையும் ஆணைகளையும் பிறப்பித்தல், ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்களை விளக்கியிருக்க வேண்டும்.

iii) அறிமுகம் - 1 உள்ளடக்கம் - 7, முடிவுரை – 2
பொதுசன அபிப்பிராயத்தின் இயல்புகள், பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் பாதிப்புச் செலுத்துக் காரணிகள் தொடர்பாக விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

iv) அறிமுகம் 1
சிவில் சமூகத்தின் பண்புகள், வகிபங்கு என்பவற்றுக்கு – 8 புள்ளிகள்
முடிவுரை – 1 புள்ளி

(10X2=20 புள்ளிகள்)

03\. i) மந்திரிசபை அரசாங்க முறையின் நிறைகளும் குறைகளும் தனித்தனியாக விளக்கமாக எழுதப்பட்டிருத்தல்.

ii) அனைணத்தான்மை அரசாங்கமுறையின் பிரதான பண்புகள் எழுதி விளக்கியிருக்க வேண்டும்.

- ஓர் உத்தியோக பூர்வ கருத்தின் அடிப்படையில் ஆட்சி ஒழுங்கமைத்து இருத்தலும், ஏனைய அரசியல், பொருளாதார கருத்துக்கள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்கப்படுதலும்.
- தனிக்கட்சி ஆதிக்கம்.
- அடக்குமுறை ஆட்சி, குறிப்பாக அரசபயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஓர் பயங்கரமான பொலிஸ் பொறிமுறை நிலவுதல்.

agaram.lk

- பொது நன்மைகள் பற்றி அரசாங்கமே பொருள் கூறுதலும், எந்தவொரு தனிப்பட்ட நலன்களும் முன்னனிக்கு வருவது தடுக்கப்படுதலும்.
- அரசின் தனியுரிமைக்கு கீழ்ப்பட்ட பொருளாதாரம்.
- அரசின் தனியுரிமைக்கு கீழ்ப்பட்ட ஊடகம்.
- ஆட்சி முறையினை எதிர்த்தலினை அரச துரோக செயலாகக் கருதுதல்.

(10X2=20 புள்ளிகள்)

*04.* i) அமெரிக்க ஜனாதிபதி தொடர்பான பொதுவான விடயங்களைக் குறிப்பிட்டு, நிறைவேற்று அதிகாரம் பற்றி எழுதுதல் - 2 புள்ளிகள். நிறைவேற்று அதிகாரத்தின் மீது தடைகள் விதித்தல் தொடர்பாக காங்கிரஸ் பின்பற்றும் வழிமுறைகள் மற்றும் உயர்நீதிமன்றம், சமஷ்டி நீதிமன்றினால் ஏற்படும் தடைகளை விளக்கியிருத்தல் - 6 புள்ளிகள். நடைமுறை விடயங்களைக் குறிப்பிட்டு, முடிவுரையும் அமைதல் - 2 புள்ளிகள்.

ii)

1) அரசியலமைப்பு எழுதப்பட்டதாகவும், நெகிழாததாகவும், உயர்தன்மை பொருத்தியதாகவும் இருத்தல்.
2) மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையில் அதிகாரம் பங்கிடப்பட்டிருத்தல்.
3) அரசியலமைப்பின் பாதுகாவலனாகச் செயற்படும் சுயாதீனமான தலைமை நீதிமன்றம்.
4) இரட்டை அரசாங்க முறை இருத்தல்.
5) மத்திய அரசாங்கத்திவ் மாநில அரசாங்கங்களுக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

போன்ற விடயங்களைக் குறிப்பிட்டு எழுதியிருக்க வேண்டும்.

iii) அறிமுகம் - 2 உள்ளடக்கம் 2, முடிவுரை – 2 புள்ளிகள்.
சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுத்துறை நியமிக்கப்படுதல், சட்டத்துறையிலிருந்து கபினட்டின் ஏனைய உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல், நிறைவேற்றுத்துறைக்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தல், நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு கூட்டாக பொறுப்புக்கூற கடமைப்பட்டிருத்தல், நிறைவேற்றுத்துறை சட்டத்துறையின் இருப்பினை தீர்மானித்தல்

போன்ற விடயங்கள் விளக்கி எழுதப்படுதல்.

iv) சுவிட்சர்லாந்தின் நிறைவேற்றுத்துறையான சமஷ்டிப் பேரவை, சமஷ்டி மன்றிலிருந்து தெரியப்படும் விதம், கூட்டுநிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள், பணிகள் போன்ற விடயங்கள் குறிப்பிடப்படல்.

## பகுதி C

*05.* குடியேற்ற நாட்டாட்சிக் காலத்தில் இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களைப் பரிசீலனை செய்து அம்மாற்றங்களின் சாதகமானதும், பாதகமானதுமான தன்மைகளை விளக்கியிருக்க வேண்டும்.

மாணவர்களின் தனிப்பட்ட துலங்கல்கள் மற்றும் சில அம்சங்களைத் தெரிவு செய்து, தற்க ரீதியாக எழுதியிருக்கும் விடைகள் முழுமையானவையாகும்.

*06.* i) சர்வசனவாக்குரிமையால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக விளைவுகளைப் பற்றி ஒப்பீட்டு ரீதியாக எழுதப்படல்.

அ) பிரதிநிதித்துவ சனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்படுதல்.
ஆ) பொறுப்புக்கூறும் அரசாங்கத்திற்குப் பழக்கப்படுதல்.
இ) அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கான தளம் இடப்பட்டமை
ஈ) சமூக மாற்றம் துரிதம் அடைதல்.
உ) சமூகப் பொது நலன் வேகமாக விருத்திபெற்றமை.
போன்ற விடயங்கள் விளக்கி எழுதப்படல்.

agaram.lk

ii) டொனமூர் சிபார்சுகள், நிறைவேற்றுக் குழுமுறைபற்றிய விளக்கம் என்பவற்றுடன் மந்திரிமார் அவை தொடர்பான அமைவுச் சேர்க்கை அறிமுகத்தில் இடம்பெறல்.

மந்திரிமார் சபையின் பணிகள், சாதக, பாதக விடயங்களை போன்ற விடயங்களைக்குறிப்பிட்டு எழுதியிருக்க வேண்டும்.

iii) பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உண்மை நிறைவேற்றுத்துறை என்ற வகையில் அதன் விடயங்கள்.

iv) சோல்பரி பாராளுமன்றம் அறிமுகம், செனட்டின் அமைவுச்சேர்க்கை, அதிகாரங்கள், நிலை என்ற விடயங்கள் எழுதப்படல்.

07. i) தேசிய அரசுப் பேரவை மீயுயர் கருவி என்ற வகையில் அதன் அமைவுச் சேர்க்கை. அதிகாரங்கள், பணிகள், நிலை என்பன முழுமையாக விளக்கப்படல்.

ii) 1972 நாமநிருவாகியான ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டமுறை, மற்றும் அதிகாரங்கள், பணிகள், நிலை.

iii) அரசியல் யாப்பு நீதிமன்றத்தின் அமைவுச்சேர்க்கை, மசோதாக்களை பரிசீலிக்கும் போது பின்பற்றிய நடவடிக்கை முறை போன்ற விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படல்.

(10X2=20 புள்ளிகள்)

08. i) 19 ஆவது யாப்புத் திருத்தத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் குறிப்பிட்டு விடை எழுதியிருக்க வேண்டும்.

ii) தற்போதைய பிரதிநிதித்துவ முறை, மற்றும் சாதக, பாதக விடயங்கள் எழுதப்படுவதுடன், தொகுதிவாரிமுறையுடனும் ஒப்பிட்டு எழுதப்பட்டிருப்பின் முழுமையான புள்ளிகளை வழங்கலாம்.

agaram.lk

iii) உயர் நீதிமன்றத்தின் அமைவுச் சேர்க்கை, அதற்கான தனித்துவமான அதிகாரங்களைக் குறிப்பிட்டு எழுதியிருக்க வேண்டும்.

iv) குறைகேள் அதிகாரி நியமிக்கப்படும் முறை, அவை தொடர்பான அறிமுகம், செயற்பாடுகள், மற்றும் விமர்சனம் என்பவை உள்ளடக்கப்பட்டிருத்தல்.

(10X2=20 புள்ளிகள்)